*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*18 04 2026 SATURDAY 6 30 PM*
*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. *பிரதமரின் மூன்றாவது கட்ட கிராமச் சாலை திட்டத்தை 2028-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*
2. *மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை ஜனவரி ஒன்றாம் தேதிமுதல் இரண்டு சதவீதம் உயர்த்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*
3. *பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு மணி 8.30-க்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.*
4. *வாரிசு அரசியலை நம்பியிருக்கும் திமுக-விற்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*
5. *தென் மாநிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டுவர பிஜேபி முயற்சி செய்ததாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.*

***இனி விரிவான செய்திகள் –***

*>>>>>> <<<<<<*

*பிரதமரின் மூன்றாவது கட்ட கிராமச் சாலை திட்டத்தை 2028-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*கிராமப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், வேளாண் சந்தைகள், மேல்நிலைப்பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் வகையில் சாலைகள் அமைப்பதற்கும் இந்த திட்டம் வகை செய்கிறது.*

*இந்த திட்டத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதையடுத்து, இதற்கான திட்ட ஒதுக்கீடு 83 ஆயிரத்து தொள்ளாயிரத்து 77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.*

*பிரதமரின் மூன்றாவது கட்ட கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள பணிகளை விரைந்து முடிப்பதற்கு இது வகை செய்கிறது.*

*கிராமச் சாலைகளை தரம் உயர்த்துவதற்கான பணிகளை மேற்கொள்ளவும், அத்தியாவசியப் பொருட்கள் போக்குவரத்து தடையின்றி நடைபெறுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.*

*கிராமப்புறங்களில் கணிசமாக வேலைவாய்ப்புகள் இதனால் அதிகரிக்கவும் இந்த திட்டம் வகை செய்கிறது.*

*>>>>>> <<<<<<*

*மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு இவ்வாண்டு ஜனவரி ஒன்றாம் தேதிமுதல் இரண்டு சதவீதம் கூடுதல் அகவிலைப்படி வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*இதனையடுத்து, தற்போது 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 60 சதவீதமாக உயருகிறது.*

*இதனால், ஆண்டொன்றுக்கு 6 ஆயிரத்து 791 கோடியே 24 லட்சம் ரூபாய் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அகவிலைப்படி உயர்வு அறிவிப்பினால் 50 லட்சத்து 40 ஆயிரம் மத்திய அரசு ஊழியர்களும், 68 லட்சத்து 27 ஆயிரம் ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.*

*>>>>>> <<<<<<*

*பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு மணி 8.30-க்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் பிரதமரின் உரையை அஞ்சல் செய்யும்.*

*>>>>>> <<<<<<*

*வாரிசு அரசியலை நம்பியிருக்கும் திமுக-விற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.*

*நீலகிரி மாவட்டம் உதகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிப்பதை காங்கிரஸும் திமுக-வும் ஏற்றுக்கொள்ளாததால்தான் மக்களவையில் இந்த மசோதாவை நிறைவேற்ற விடாமல் தடுத்தனர் என்று குற்றம் சாட்டினார்.*

*திமுக போலியான வாக்குறுதிகளை தொடர்ந்து அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.*

*பெண்களுக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் எதிராக அவர்கள் கூட்டணி செயல்பட்டு வருவதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.*

*>>>>>> <<<<<<*

*குடிமராமத்து உள்ளிட்ட விவசாயிகளுக்கான பல நலத்திட்டங்கள் அஇஅதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*கோபிச்செட்டிப்பாளையத்தில் இன்று தங்களது கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகண்டதாக தெரிவித்தார்.*

*தமிழகத்திற்கு மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று தவறான பிரச்சாரத்தை திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டிய அவர், மத்திய அரசு அளித்த நிதியை திமுக அரசு முறையாக பயன்படுத்தவில்லை என்று கூறினார்.*

*கோவிட் பெருந்தொற்று காலத்தில் அஇஅதிமுக அரசு வரியை ஏற்றாமலும், விலைவாசியை உயர்த்தாமலும் சிறப்பாக செயல்பட்டதாக அவர் கூறினார்.*

*மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற தங்களுக்கு வாய்ப்பளிக்குமாறு திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.*

*>>>>>> <<<<<<*

*தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டுவர பிஜேபி முயற்சி செய்ததாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.*

*ராணிப்பேட்டையில் தங்களது கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களின் வரலாறு, மொழி, கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறினார்.*

*திமுக, தமிழக மக்களுக்கு நல்ல திட்டங்களை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*தமிழகத்திற்கான கல்வி நிதி, மதுரை, கோயம்புத்தூர், மெட்ரோ ரயில் சேவை போன்றவற்றை மத்தியில் ஆளும் பிஜேபி வழங்க மறுப்பதாகவும் அவர் கூறினார்.*

*சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களது கூட்டணி வெற்றிபெற வாக்களிக்குமாறு திரு ராகுல்காந்தி கேட்டுக்கொண்டார்.*

*>>>>>> <<<<<<*

*மகளிர் மற்றும் மாணவர்களுக்கான பல நலத்திட்டங்கள் திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் இளைஞரணி செயலர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*ஈரோடு கிழக்கு மற்றும் மேற்குத் தொகுதிகளில் தமது கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக மீண்டும் ஆட்சி அமைத்தால் அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.*

*தமிழகத்திற்கான நிதியை மத்திய அரசு தருவதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.*

*தொகுதி மறுவரையறை தொடர்பாக தமது கூட்டணி சரியான முடிவை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த தேர்தலில் தங்கள் கூட்டணிக்கு வாய்ப்பளித்து வெற்றிபெறச் செய்யுமாறு திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.*

*>>>>>> <<<<<<*

*<u>இனி தேர்தல் களம்…</u>*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட சில தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 180 செகண்ட்ஸ்)*

*>>>>>> <<<<<<*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில், பொன்னேரிக்கரை வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சினேகா இன்று ஆய்வு செய்தார்.*

*-----------*

*செங்கல்பட்டு மாவட்டம் செம்பாக்கத்தில் உரிய ஆவணம் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடியே 2 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*>>>>>> <<<<<<*

***Busan* ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Aniruth Chandrasekar* – ஜப்பானின் *Takeru Yuzuki* இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை *4-6, 7-6, 10-8* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Rithvik – Arjun Kadhe* இணையை வென்றது.**

**------------------**

**ஐ.பிஎல் கிரிக்கெட் போட்டியில், சென்னை அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.**

***>>>>>>END<<<<<<***